ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

## ॥ द्वादशमञ्जरिका ॥

**भज गोविन्दं भज गोविन्दं भज गोविन्दं मूढमते ।**
**सम्प्राप्ते सन्निहिते काले न हि न हि रक्षति डुकृञ्करणे ॥**

| | |
|---|---|
| **मूढमते!** | மூடபுத்தியுள்ளவனே! |
| **गोविन्दं** | கோபாலமூர்த்தியாய் அவதரித்த பரமாத்மாவை |
| **भज** | ஸேவிக்கக்கடவாய். |
| **सन्निहिते** | (பிராணம் போவதற்கு) நெருங்கிய |
| **काले** | காலமானது |
| **संप्राप्ते सति** | வந்துவிட்டால் |
| **डुकृञ्करणे** | ‘டுக்ருஞ்கரணே’ என்றிம்மாதிரியுள்ள சப்தமானது |
| **न हि रक्षति** | இரக்ஷிக்கமாட்டாது. |

இங்கு (**भज गोविन्दं**) என்று மூன்றுதடவை கூறியது ஆதரவு மிகுதியாலாம், **न हि** என்று இரண்டுதடவைகூறியது ஒருகாலும் இரக்ஷிக்கமாட்டாது என்பதற்காகவாம்.

வியாகரணம் முதலிய சாஸ்திரங்களையே எப்பொழுதும் நெட்டுருப் பண்ணிப் பொருள்தேடிச் சுகித்திருக்க வேண்டுமென்ற கருத்துடைய சில சிஷ்யர்களை நோக்கி பகவத்பாதாசாரிய ஸ்வாமிகள்வாள் ‘துவாதச மஞ்சரிகை’ என்னும் சிறியதொரு பிரகரணத்தால் உபதேசிக்கின்றார்கள். “நல்லபுத்தி நாடாமல் மூடத்தனத்தால் முரட்டுப் பிடிவாதம் பிடிக்கும் மனதுள்ள பாலகர்கள், கோவிந்தபஜனை செய்யுங்கள். நீங்கள் உருப்போட்டுவருகிற சப்தங்களெல்லாம் மரணகாலம் சமீபிக்கும்பொழுது இரக்ஷிக்க முன்வரமாட்டா. ஆகையால் பரமேசுவரனையே பஜனை செய்யுங்கள். அவர் காப்பாற்றுவார்.

இந்த சுலோகத்தை ஒவ்வொரு சுலோகமுடிவிலும் சொல்லிவருகிறார்கள். ஆனால், இந்த சுலோகம் துவாதசமஞ்சரிகைக்கு வியாக்கியானமியற்றிய ஸ்வயம்பிரகாச யோகீந்திராள் என்றஸ்வாமிகளவர்களால் வியாக்கியானம் செய்யப்படவில்லை. அவருடைய வியாக்கியானக் கிரந்தத்தின் முதலிலாவது முடிவிலாவது இப்படியொரு சுலோகமுண்டென்று ஸூசனை செய்யப்படவுமில்லை. ஆயினும், சம்பிரதாயமாய்ப் பெரியோர்கள் சொல்லிவருவதை அனுஸரித்து இதில் பிரசுரித்தோம்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய-௵ வைகாசி-௴ ௧௪-௳

## சிரத்தானந்தர் கூறியது சரியல்ல.

சென்ற சித்திரை-௴ 31-௳ வெளிவந்த ஸமரஸபோதினி யில் 5-ஆவது பக்கத்தில் பெண்கள் கவனிக்க என்று தலையங்க மிட்டு ஸ்வாமி சிரத்தானந்தர் எழுதுகிறார் என்று ஒரு வியா ஸம் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதன் ஸாராம்சமாவது ஸ்திரீகள் முறையே பிதாபர்த்தா புத்திரன் முதலானவர்களுடைய கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டுமென்றும் பெண்களுக்கு ஸ்வதந்திரமில்லை என்றும் மநு ஸ்மிருதியில் எழுதப்பட்டிருப்பது மேற்கூறும்.

**यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः ।**
**यत्र तास्तु न पूज्यन्ते सर्वास्तत्राफलाः क्रियाः ॥**

அதாவது, பெண்கள் கௌரவிக்குமிடங்களில் ஸத்தியமும் தர்ம மும் பெருகும் அவர்களைக் கௌரவிக்காதவிடத்து எந்தக் காரிய ஸித்தியும் ஏற்படாது. என்கிற இந்த வசனார்த்தத்தால் அடிப் பட்டுப்போகிறதென்று கூறப்பட்டிருக்கிறது.

இங்கு இவ்விதம் கூறியிருப்பது மிகவும் தவறே. ஸ்திரீ களுக்கு ஸ்வாதந்திரியம் கூடாதென்று சொல்லும், 'பிதாரக்ஷதி' என்கிற வசனத்திற்கும், யத்ரநார்யஸ்து, என்கிற வசனத்திற்கும் என்ன ஸம்பந்தம். இதினால் அது எப்படி அடிபடும். சாஸ்தி ரங்களில் ஒரு வசனத்தால், மற்றொரு வசனத்திற்குப் பாதகம் ஏற்படுகிறதாக இருந்தால் அதற்குப் பல நியாயங்களேற்பட்டி ருக்கின்றன. அவைகளில் உத்ஸர்க்கம். அபவாதம் என்று கூறி, உத்ஸர்க்க சாஸ்திரத்திற்குற்ற லக்ஷணத்தையும் அபவாத சாஸ்திரத்திற்கேற்பட்ட இலக்கணத்தையும் நன்கு நிரூபித்துப்

பிறகு அபவாத சாஸ்திரத்தால் உத்ஸர்க்க சாஸ்திரத்திற்குப் பாதகம் ஏற்படுகிறதென்று செப்பினுல் யாவரும் அங்கீகரிக்க உசிதமாயிருக்கும். அஃதன்றி தம் உள்ளத்தில் ஒன்றைக் கருதிக்கொண்டு (அதாவது ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் உண்டென்று சாஸ்திரங்களின் அபிப்ராயமாகச்சாற்றவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத ஒரு வசனத்தைக்காட்டி இதினுல் அது அடிபட்டுப் போகிறதென்றுல், இது என்ன சாஸ்திரார்த்தம். இரண்டாவது வசனத்தால் முதல் வசனம் அடிபட்டுப் போகிறதென்றுல் அந்த வசனத்தை மநு எதிற்காக எழுதினுர். அதற்கு யாது பயன். நம் சிரத்தானந்தர் கொள்ளும் கருத்தை மநுவும் கொண்டிருப்பாராகில், பிதா ரக்ஷதி, என்கிற வசனத்தை அவர் எழுதியிருக்கமாட்டார். அடிவாங்குவதற்காக மாத்திரம் ஒரு வசனத்தை அனுவச்யமாய் ஒரு மஹரிஷிஎழுதினுர் என்றுகூற அதிக தைர்யம்வேண்டும். மேலும் யத்ரநார்யஸ்து, என்கிற இரண்டாவது வசனத்தின் கருத்தை சிரத்தாநந்தரைப்போல் இல்லாமல், பொதுவாயிருக்கும் பண்டிதர்கள் கவனித்தால் இந்த வசனமே முன்வசனம் அவசியமிருக்க வேண்டுமென்றும் அதினுல்தான் இந்த வசனத்திற்குப்புஷ்டியான கருத்தேற்படுகிறதென்றும் நன்கு விளங்கும். அதாவது எந்த வீட்டில் ஸ்திரீகள் பூஜிக்கப்படுகிறுர்களோ அந்த வீட்டில் தேவதாஸாந்நித்திய மேற்படுகின்றது. என்று எழுதப்பட்டிருக்கின்றது.

இதினுல் ஸ்திரீகளை பிதா முதலானவர்கள் ஸந்தோஷமாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருத்தேற்பட்டது. சிரத்தானந்தர் கருத்தின்படி ஒரு கிரஹத்தில் ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் ஸ்வாதந்திரியம் ஸமானமாயிருக்கும் பக்ஷத்தில் புருஷர்கள் தங்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களை நடத்திக் கொள்வது போல் ஸ்திரீகளும் ஏன் செய்து கொள்ளக்கூடாது. இவர்களிஷ்டத்தைத் தாமாகச் செய்து கொள்ளும் சக்தியும் ஸ்வாதந்திரியமும் இருக்கும் பொழுது இவர்களுக்கு ஸ்வாதந்தரியமில்லை. என்றும், பிதா முதலியவர்களே அதற்குரியவர்களென்றும் அவர்கள் ஸ்திரீகளைப் பாதுகார்க்கவேண்டிய கடமையிலிருந்தும் தவருமல் நன்குஅவர்களைக்கஷ்டப்படுத்தாமல் ரக்ஷிக்கவேண்டும். அவ்

விதம் ரக்ஷித்தால் தான் அக்குடும்பம் க்ஷேமமாயிருக்குமென்றும் எழுதியிருப்பதை கவனித்தால் முற்கூறிய சுலோகத்தின் கருத்தையனுஸரித்தே இதையும் வெளியிட்டிருக்கிறார் என்று நன்கு விளங்கவில்லையா? ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்தரியமில்லை என்று ஸ்பஷ்டமாய்க்கூறும் இவ்வசனத்தை ஸவாதந்திரியம் உண்டென்பதற்கு ஆதாரமாக எப்படி தைர்யமாய் வெளியிட நம் சிரத்தாநந்தர் முன் வந்தாரோ தெரியவில்லை.

(2) ருதுவாகி மூன்று ஆண்டுகள் காத்திருந்து பிறகு தனக்கேற்ற கணவனை ஒரு ஸ்திரீ வரித்துக்கொள்ள நமது சாஸ்திரம் ஸம்மதிக்கிறது என்றும் சொல்லுகிறார்.

எந்த ஸமயத்தில் எந்த மாதிரி ஸ்திரீயை உத்தேசித்து இவ்விதம் கூறப்பட்டிருக்கிறதென்பதை சற்று மறியாமல் பொதுவாய் ருதுவாய் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்திரீகள் விவாகம் செய்து கொள்ளலாமென்று எழுதியதும் தவறேயாகும்.

மிகவும் ஆபத்காலத்தில் சில கீழ் ஜாதி ஸ்திரீகளை யுத்தேசித்து இவ்வசனம் எற்பட்டதேயன்றி பொதுவாய் சொல்லப் படவில்லை.

இக்கருத்தைக் கொண்டு தான் பிதாவினுடைய கிருகத்தில் எந்த ஸ்திரீ விவாகமாகாமல் ருதுமதியாக ஆகிறாளோ, அந்த பிதா முதலியவர்களுக்கு ப்ரூணஹத்தி தோஷமுண்டென்றும், அந்த ஸ்திரீ விருஷளி என்றும், அவளை விவாஹம் செய்த பிராமணன் விருஷளனென்றும், அங்கிரஸ் லகுசாதாதபர் ஆச்வலாயனர் வஸிஷ்டர், இயமன், ஸம்வர்த்தர், போதாயனர், யாக்ஞவலக்யர், நாரதர், பிரகஸ்பதி, நிர்ணயஸிந்து மஹாபாரதம் மரீசி முதலான மஹர்ஷிகளால் ஸ்மிருதிகளில் பலவிதமாய் தூஷிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மஹரிஷிகள் யாவரும் அறிவில்லாதவர்களா? இவ்விதம் ஸ்பஷ்டமாயிருக்கும் இவ்வசனங்கள் சிரத்தாநந்தரின்கண்ணில் படாமல் மறைந்து கொண்டிருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. யாரோசிலருக்கு ஆபத்காலத்தில் சொன்ன ஒரு விதியைப் பொதுவாக எடுத்துக்காட்டி ஜனங்களை மோசம் செய்வது எங்ஙனம் உசிதமாகும். (தொடரும்.)

உபபத்திராதிபர்.

# கயாக்ஷேத்திரத்தில்புத்தாவதாரபகவானுடைய ஆலயம்.

(உ௪௯-வது பக்கத்தொடர்ச்சி.)

14. அவ்விதமே சைவத்திலும் வைஷ்ணவத்திலும் அந்தணர்கள் ஆலய ஆராதனம் செய்வதுபோல சமணர்என்று சொல்லும் ஆருகதர்களிலும் அந்தணர்களிலிருந்து அவர்களுடைய மதாசாரங்களையும் ஆலய பூஜைகளையும் நடத்திவருகிறார்கள். வீரபௌத்தரான அசோக சக்கிரவர்த்தியும் கி. மு. 300ம் வருஷத்தில் பாதக்கண்ட முழுவதும் ஆண்டு பௌத்த தர்மத்தைப்பிரசாரம் செய்வதற்காக ஆங்காங்கு நாட்டிய கல் தூண்களிலும் இயற்கைப்பாறைகளிலும் எழுத்துக்களை வெட்டிபௌத்த தர்மப்பிரசாரம் செய்திருக்கிறான். அவ்வெழுத்துக்களிலும் கூடப்பெற்றோர்கள், பெரியோர்கள், பிராம்மணர்கள் இவர்களிடத்தில் மரியாதையாக நடக்கவேண்டுமென்று பிரஜைகளுக்குக் கட்டளை செய்திருக்கிறான். பில்ஹணன், ஸ்ரீ ஹர்ஷன் முதலிய மகா கவிகளும், மகாராஜாக்களும் கூட தமது நூல்களில் வேத புராணங்களில் கூறப்பட்ட, பரமசிவன், அம்பிகை, விஷ்ணு முதலிய தேவதைகளுடன் சேர்த்துப் புத்தபகவானைத் துதித்திருக்கின்றனர். அவ்விதமே உலகவழக்கத்திலும் ஆராதித்திருக்கின்றார்கள். அசோக மகாராஜா கல்வெட்டுகளில் தான் இனி ஒரு பிராணியையும்கொன்று தின்பதில்லை என்று பிரதிக்ஞை செய்திருக்கின்றான். இக்காலத்தில் இப்புத்தகயாவில் தங்களுக்கு எனவேண்டும் பௌத்தர்களோ ஒருவிதி நிஷேதமுமில்லாது எல்லாப்பிராணிகளின் மாம்சங்களையும் தின்பவர்கள். பர்மாவில் கொங்கிஎன்று கூறப்படும் பௌத்த சன்னியாசிகள்கூட மாம்சம் தின்பவர்கள். பௌத்தர்களுக்கு அஹிம்சையே பெரிய தர்மம். இவ்விதம் சகலவித மாம்சங்களையும் உண்பவர்கள் பௌத்தர்களாய் விளங்குகிறார்கள். இவர்களே புத்தகயாவில் புத்தபகவானைக் கைவசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எத்தனம் செய்கிறார்கள். தற்பொழுது அவ்விடம் பூஜையை நடாத்துபவர்கள் பிராம்மண மதத்தில் பிறந்து பிக்ஷு ஆச்ரமத்தில் அமர்ந்து புத்ததர்மத்தில் பிரதானமான அஹிம்சா தர்மமான கொலை மறுத்தலைக்கொண்ட சன்னியாசிகள். இவர்களே பூஜித்தால் என்ன குறையோ? புத்தபகவானுக்கு இது ஏற்காதோ?

* * * *

15. இம்மட்டோடு நில்லாது டில்லி சட்டசபையில் (Legislative-Assembly) ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுகிறதாம். அதன்படி இவ்வாலயத்தைப் பௌத்தர்களிடம் கொடுத்துவிட வேண்டியதாம். இத்தீர்மானத்தைச் சபையில் கொண்டுவர ராஜப்பிரதிநிதியும் அனுமதிகொடுத்துவிட்டாராம். இந்நிலைமையில் ஹிந்துக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சட்டசபையினர் நம்பிக்கை மோசம்செய்து தர்மத்ரோஹிகளாகாமல்

நியாயமான மார்க்கத்தில் ஒட்டுரிமையைக் கொடுத்துத் தர்மத்தைக் காப்பாற்றுவார்களாக. மகாஜனங்களும் சபைகள் மூலமாக அவ்வங்கத்தினர்களுக்கு தர்மத்தையும்சத்தியத்தையும் உணர்த்துவார்களாக. ஸ்ரீ பகவானும் அனுக்கிரகிப்பாராக.

பூனா. வே. ராமரத்னமய்யர்.

---

# ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்

## நாகபட்டணம்.

——)o(——

இந்நகரில் ஏற்பட்டிருக்கும் ஸ்ரீ ஆசார்ய கைங்கர்யசபாவின் ஆதாஙணயில் இந்த வருஷம் ஸ்ரீ சங்காஜயந்தி மஹோத்ஸவமானது ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீ ஜகத்குரு பீடாதிபதி ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய ஆக்ஞையை முன்னிட்டு மதுரை பிரம்மஸ்ரீ எம். என். சுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் முதல்நாளே இவ்விடம் விஜயம் செய்து உத்சவத்தை நடத்திவைத்தார்கள். முதல்நாள் மாலை கீழ்வளூர் உப. வே. குப்புசாமி பட்டாசாரி ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மீனாக்ஷி பரிணயம் என்ற விஷயமும் நாகை பிரம்மஸ்ரீ சேதுராமசாஸ்திரிகள் அவர்கள் ஹிந்துமதமும் சங்கத்தின் மகிமையும், என்ற விஷயம் உபன்யசித்தார்கள். ஸ்ரீசங்கர ஜயந்தியன்று காலையில் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலிலும் ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்மன் கோவிலிலும் விசேஷமாக அபிஷேக ஆராதனைகளும் வேத உபநிஷத் பாராயணங்களும் நடத்தப்பட்டன. பிறகு ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் அழகாக அமைக்கப்பெற்ற மண்டபத்தில் ஸ்ரீ குருமூர்த்தியின் உத்சவ விக்ரஹத்திற்கும் ஸ்ரீசங்கரபகவத் பாதாளுடைய திருவுருவப்படத்திற்கும் விசேஷமான பூஜை ஆராதனைகளும், பிர்ம்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்பட்டன. சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ பகவத்பாதாளுடைய அவதார கட்டத்தை உபன்யசித்தார்கள். பிறகு பிராம்மண சந்தர்பணையும் ஏழைகளுக்கு அன்னதானமும் நடைபெற்றன. மறுபடி சாயந்திரம் பிரம்மஸ்ரீ எம். என். சுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்

கள் ஆசார்யபக்தி என்ற விஷயத்தைப்பற்றி வெகு அரிய உபன் யாசம் செய்தார்கள். பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் அவர் களுட் ஸ்ரீ பகவத்பாதாளுடைய விசேஷங்களைப்பற்றி வெகு விம ரிசையாக உபன்யசித்தார்கள். பிறகு சபையின் காரியதரிசி அவர்களால் ஸ்ரீ ஆசார்யகைங்கர்ய சபாவின் நோக்கங்களைப் பற் றியும் இந்நகரத்திலுள்ள சங்கங்களுக்கு ஜாஸ்தியாக அனுக்கி ஹத்தைச் செய்துவரும் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு மஹா ஜனங்களுடைய சாஷ்டாங்க நமஸ்காரங்களைத் தெரிவித்துக்கொள் ளப்பட்டபிறகு ஸ்ரீ குருமூர்த்தியினுடையவும் ஸ்ரீ சங்கரபகவத் பாதாளுடைய திருவுருவப்படத்தினுடையவும் வீதிஉலாக்காக்ஷி யானது பிராம்மணோத்தமர்களுடைய வேதபாராயணத்துடன் வெகு விமரிசையாக நடைபெற்று உத்ஸவமானது பூர்த்தி செய் யப்பட்டது. இந்நகரிலுள்ள சங்கங்கள் மேன்மேலும் அபிவிரு த்தியடையும்படி ஸ்ரீ திரிபுரசுந்தரிசமேத ஸ்ரீ சுந்தர மௌளீச் வரரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ ஆசார்ய கைங்கர்ய சபா, நாகப்பட்டணம். } N. சாம்பசிவ அய்யர், B.A., B.L. காரியதரிசி.

---

## ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

### (ஒன்பதாமாண்டு.)

நாளது க்ஷய ஸூ வைகாசி மீ 3 உ ஞாயிற்றுக்கிழமை பஞ்சமீ புண்யதினத்தில் வழக்கம் போல் காட்டுமன்னார்கோவில் மிராசுதார், வி. நடேச சாஸ்திரியார், இல்லமாம் சங்கரவிலாஸத் தில் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம், ஷை யார் கிருஹத்தில் நடந்துவந்த ஸ்ரீ ஹாலாஸ்யமகாத்மிய ஸமாப்திமஹோத்ஸவத்து டன் சிறப்பாய் நடந்தேறியது.

இக்கலிகாலத்தில், கண் இல்லாதவற்குக் கைக்கோல் போல், ஸம்ஸாரிகளான அக்ஞானிகளுக்கு ஞானதீபமாய் விளங்கும் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள் அவர்களுடைய பேரு தவிக்குக் கைமாறு ஒன்றுமில்லையேயாயினும் அவர்களுடைய ஜன்மதினமான புண்யகாலத்தில் ஆசார்யப் பிரதிபிம்ப பூஜையும்

ஷை சரித்திர சிரவணமும் நன்றிகாட்டக் கருவியாயிருத்தல் பற்றி அன்றுகாலை 10 மணிமுதல் உபநிஷத்பாராயண பூர்வமாகப் பூஜையும் ஆசார்யாஷ்டோத்திரசத நாமார்ச்சனையும் கர்ப்பூரத் தீபாராதனையும் மேளவாத்யத்துடனும் உள்ளூரிலும் சுற்றுக் கிராமங்களிலுமுள்ள அநேக உத்தம பிராமணர்களுடனும் உத்யோகஸ்தர்களுடனும் நடந்து பிராமண ஸந்தர்ப்பணமும், ஸுவாஸினீ பரிசர்யையும், 3 மணி முதல் ஆசார்யாள் "அவதாரமும் திக்விஜயவைபவமும்" வர்ணிக்கப்பட்டு மாலைபானக பூஜையுடன் முடிவுபெற்றது. ஷை சாஸ்திரியார் வருஷந்தோறும் ஆசார்ய பக்தியால் நடத்திவரும் ஷை உத்ஸவமானது அவர் சக்திக்குப் பெரிதில்லையேனும் விடாமல் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

வி. உமாமகேச்வர சாஸ்திரிகள்.

---

## திருவாதி ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

அத்வைதமதாபிமானிகளான ஆஸ்திகர்காள்!

இவ்வுலகில் ஜீவராசிகளின் நற்கதியைக்கருதிக் கருணாநிதியான ஸர்வேசுவரன் கேரளநாட்டில் காலடி என்னும் கிராமத்தின் கண் அவதரித்து ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாள் எனத்திருநாமம் பூண்டு துர்மதங்களைக் கண்டித்து அனேக பாஷ்யங்களையும் பல பிரகரணங்களையுமியற்றி அந்தந்த அதிகாரிகளுக்குத் தக்கவாறு தர்ம ஸூக்ஷ்மங்களையும் அத்வைத தத்வத்தையும் உபதேசித்து நமக்கு விசேஷமான அனுக்கிரகம் செய்து வருகிறார்கள்,

இவ்வாறு பலராலும் போற்றக்கூடிய சிறந்த மஹிமைவாய்ந்த நம் பரமாசார்யாரவர்களின் ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸமானது சென்ற துன்மதி-ஷு சித்திரை-மீ 14௳ முதல் நடந்துவருவதுடன் எனது வித்யாசார்யாளும் பிர்மீபூதர்களுமான பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீ நீலகண்டாச்ரமிகளின் அனுக்கிரகத்தை முன்னிட்டு முறைதவறாது விதிப்படி வேதாந்த சாஸ்திரம் கற்றுணர்ந்த கல்விமான்களின் உதவிபால் ஒவ்வொரு குருவாரத்திலும் மற்றும் சில வாரங்களிலும் மாலை 6 மணி முதல் 8 மணி வரையில் உபன்யாசங்கள் நடைபெறுகின்றன.

சென்ற வருஷத்திய ஜயந்திக்குப் பிறகு நாளது வரையில் எனது கிரகத்தில் விளங்கும், ஸ்ரீபரமாசார்யரவர்களின் ஸந்நிதியில் அடியில்கண்ட உபந்யாஸங்கள் நடைபெற்றன.

ஷை உபந்யாஸங்களை அத்வைதமதாபிமானிகளான அநேகம் ஆஸ்திகர்கள் அந்தந்த ஸமயத்தில்வந்து சிரத்தையாய் சிரவணம் செய்து மிகவும் சந்தோஷமடைந்தார்கள். ஷை விஷயங்களை நன்கு நடத்தவேண்டிய விஷயத்தில் எனக்கு ஸஹாயமாயிருந்த எனது வித்யாசார்யாளுக்கும் மற்றுமுள்ள பண்டிதர்களுக்கும் எனது அநேக வந்தனங்கள்.

## உபந்யாசங்களின் விபரம்.

1. பிர்மஸ்ரீ வேதாந்த ரத்னம் விசுவநாதசாஸ்திரியவர்கள், ஸ்ரீ சங்கராசார்யாள் வித்யாசாலை திருவானைக்காவல். தர்மம் 29, விவேகசூடாமணி.
2. வைத்தினாதசாஸ்திரியள் மரூர் பண்டிட் ஸம்ஸ்கிருதகாலேஜி திருவாதி—11 பகவத்கீதை, சதச்லோகீ 42.
3. ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக கவிரத்னம் ப. பஞ்சாபகேசசாஸ்திரியள்—சங்கரவிஜயம். 1.
4. ஷை பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷண வா. ஸ்வா வெங்கடராமசாஸ்திரியள்—ஸாதநம் 1.
5. என். வைத்திநாத சாஸ்திரியள் மோக்ஷம்— 1.
6. டி. என். சுப்பிரமணியசாஸ்திரியள் 1.
7. சுப்பிரமணியராமசாஸ்திரியள் 1.

நாளது அக்ஷய-ஸு-த்திய 10 ஆவது தடவையான ஸ்ரீஜகத்குரு சங்கரபகவத்பூஜ்ய பாதாளுடைய ஸ்ரீஜயந்தி மஹோத்ஸவமும் சென்ற வைகாசி-மீ 3உ பானுவாரத்தன்று பாஷ்யபாராயணம் வேதாந்த வாக்கியார்த்தம் உபந்யாஸம் வேதபாராயணம் ஸ்ரீ.மதாசார்யபூஜை பிராமண ஸந்தர்ப்பணை பானகபூஜை ஸ்ரீமதாசார்யஜனன சரித்திரம் முதலான ஆராதனங்களுடன் நன்கு நடைபெற்றது.

இச்சபையானது மெம்மேலும் விசேஷமாக அபிவிருத்தியடைந்து ஸகல ஜனங்களுக்கும் அத்வைத ஞானத்தை விருத்திசெய்து க்ஷேமத்தைக் கொடுக்கவேண்டுமென்று ஸர்வதேவதாஸ்வரூபமாய் விளங்கும் ஸர்வேசுவரரான ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளைப் பிரார்த்திக்கின்றேன்.

டி. எஸ். கோவிந்தஸ்வாமி,

பட்டுகோஸ்வாமி, ஸ்ரீ சங்கரகிங்கரன்.

---

## சிதம்பரம் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

ரா. ம. வித்தியாசாலையில் நாளதுவருஷம் 3௳ முதல் வழக்கம்போல் ஸ்ரீசங்கர பகவத்பாதாளுடைய ஜனனோத்ஸவமானது துவக்கப்பட்டு காலைமாலையில் வேதஉபநிஷத் பாராயணங்களும் விசேஷபூஜை நிவேதனங்களும் மாலை 4 மணிமுதல் ஸ்ரீ சங்கர விஜய மகாகாவ்யம் ஷை வித்தியாசாலை மாணுக்கர்களால் ஆதிமுதல் முறையே உபந்யஸிக்கப்பட்டும் வருகிறது. 7-8 திருநாளில் மாயவரம் சுந்தரேச பாகவதர்களைக்கொண்டு ஸத்கதா காலக்ஷேபங்களும் நடத்தி கடைசி தினத்தில் ஆசார்ய உருவப்படத்தின் ஊர்வலமும் நடைபெற்றது.

இந்த உத்ஸவத்தைக் கைவிடாமல் நடத்திவரும் ஷை வித்தியாசாலை தர்ம பிரபுக்களுக்கு ஈசகிருபை விசேஷமாய் அபிவிருத்திஆகி மேன்மேலும் விருத்தி அடைவிக்க ஈசன் பிரார்த்திக்கப்படுகிறுன்.

ரா. ம. அ. வித்தியாசாலை மாணுக்கர்கள்.

---

## ஸ்ரீ ச ங் க ர ஜ ய ந் தி.

ஸ்ரீ அமரகலாவிலாஸினீ சபையும் காந்திநகர் பிராமணசபையும் சேர்ந்து ஷை ஜயந்தியை மாம்பலத்தில் நடத்தினர். அன்று காலை ஸ்ரீ ஜகத்குருவை கலசத்திலாவாகனம் செய்து வேதோக்த

மாக பூஜை நடைபெற்றது. காலையில் பகவத் பாதபாஷ்யம் பாரா யணம் செய்யப்பட்டது. மாலையில் ஸ்ரீ ஆசார்யபடத்தை அலங் கரித்து உபநிஷத் பாராயணங்களுடனும் பஜனையுடனும் ஸ்ரீ ஹரி ஹர வேதவித்யா பாடசாலைக்கு ஊர்வலமாகக் கொண்டு போகப் பட்டது. அங்கு பிரும்மஸ்ரீ சோமதேவசர்மா அக்ராஸனம் வகித்து ஆசார்யருக்கு முன்னிருந்த நிலைமை, ஆசார்ய அவதாரம், லீலா விபூதிகள். தேசயாத்ரைகு மதகண்டனம், ஸ்வமத நிர்தார ணம், பாஷ்ய நிர்மாணம், சிஷ்யப்ரவசனம், மடநிர்மாணம், ஷண் மதஸ்தாபனம், ஸர்வக்ஞத்வப்ரகடனம், மந்தாதிகாரிகளுக்கேற்ற படி அவர்செய்த ஸ்தோத்ர ரசனம், ஆத்மநிதர்சனம், முக்திஸ்வ ரூபம், மாயாப்ரகிருதி, ஜீவஸ்வபாவம, கர்மபந்தனம், ஸ்வதர்மா சரணம் முதலியவைகளை விளக்கி அரியதோர் உபந்யாசம் செய் தார். அதையனுஸரித்து பல பண்டிதர்கள் பேச மாணவர்கள் மந்த்ர புஷ்பம் சொல்ல முடிவில் ப்ரஸாதமும் இலவசமாக ஷை சர்மா எழுதிய ஸ்ரீசங்கரகுரு சரிதமும் அளிக்கப்பட்டது.

154. தம்புசெட்டித்தெரு,
சாந்தாச்ரமம் சென்னை.

T. ராமநாத தீக்ஷிதர்,
காரியதரிசி.

---

## ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு இனும்.

ஸ்ரீ ஜகத்குரு ஆசாரியார் ஜயந்தியைக் கொண்டாடும் எவ ருக்கும் நமது ஆர்யதர்மம் சந்தாநேயர்களுக்கும் ஸ்ரீ சித்விலாஸ யதீந்திரர் சங்காவிஜயத்தை யொட்டி எளிய தமிழ் நடையில் மஹோபாத்யாயர் பிரும்மஸ்ரீ பிரஸங்கவர வெ. ஸோமதேவசர்மா அவர்களால் இயற்றப்பட்ட ஸ்ரீ சங்காகுரு சரிதம் என்ற நூல் ஓர் பக்ஷம் (15 நாள்) வரையில் இலவசமாக அனுப்பப்படும் தங்கள் தங்கள் சந்தா நம்பரோடு தபால் செலவிற்காக சரியான புக்போஸ்டில் 1 (ஒரு) அணு ஸ்டாம்பு 'சந்தாச்ரமம், 154. தம்பு செட்டித்தெரு' என்ற விலாஸத்திற்கனுப்பவும்.

T. ராமநாத தீக்ஷிதர்.
காரியதரிசி.

# ஸ்ரீ ஹரிஹர வேதவித்யாபீடம்
## (அர்த்தவார்ஷிக அறிக்கை.)

மாம்பலம் ஸ்ரீ பிராமண ஸபையினாதரவில் சென்ற விஜயதசமியன்று ஆரம்பிக்கப்பட்ட ஷடி பீடத்தில் பிரம்மஸ்ரீ வெ.ஸோமதேவசர்மா வேதகாவ்ய குருவாக நியமிக்கப்பட்டார். பிரதி தினம் காலையில் 6-மணி முதல் 8-மணி வரையில் ஏறக்குறைய 30 பிள்ளைகள் படிக்கின்றனர். இதுவரை வேதத்தில் ஸந்தியாவந்தனம், புருஷ ஸூக்தம், பஞ்ச சாந்தி, ஸ்ரீ ஸூக்தம, ஸமிதாதானம், பிரம்மயக்ஞம், ருத்ரம், பூஸூக்தம் முதலியன அத்யயநம் செய்விக்கப்பட்டன. காவ்யத்தில் சப்தம், ஸஹஸ்ர நாமம், ராமோதந்தம். ரகுவம்ச சரிதம், விக்ரமார்க்க சரிதம், ரகுவம்சத்தில் 2 ஸர்க்கமும், பாடமாயின. யக்ஞோபவீதம் நூற்கக்கற்பிக்கப்பட்டது. அநத்யயந தினங்களில் ஆசாரம், ஆலய ஸேவை முதலிய ஸதாசாரங்கள் அநுபவ பூர்வமுபன்யஸிக்கப்பட்டது. பிரதிதினம் தவறாது ஸமிதாதாநமும், ஸூர்ய நமஸ்காரமும், பிரம்மயக்ஞமும் செய்து வருகிறார்கள்.

•

லீவு (விராமத்தின்) போது பெண்களுக்கு நூல் நூற்கவும், பேசும் வழியாக ஸம்ஸ்கிருதத்தை போதிக்கவும், ஓர் தனி பகல் வகுப்பு நடத்த ஏற்பாடாயிருக்கிறது. அருகிலுள்ளோர் குழந்தைகளை யனுப்பியும் எனையோர் பொருளாவது கலய அரிசியிட்டாவது, ஷடி பீடத்தை ஆதரித்து ஸர்வேச்வரனது அநுக்ரஹத்தைப்பெறும்படி வேண்டுகிறேன்.

| ஸபைத்தலைவர் | வித்யாதலைவர் |
|---|---|
| ஸ்ரீமன் | பிரம்மஸ்ரீ |
| ரங்கஸாமி அய்யங்கார், | ச்வேதாரண்யம் நாராயணயஜ்வா. |
| மாஜி டிப்டி கலெக்டர் | |

சிரோபூஷணம் ரங்காசாரி,
காரியதரிசி.

விசுவகர்மா வரதராஜருடைய அனுக்கிரகத்தைப்பெற்ற கஜேந்திரனைப்போல ஓர் யானையைத்தந்தனன். இந்திரன் முத்துக்குடை தந்தனன். பிரமன் நவரத்னமாகிய மகுடந்தந்தனன். இவ்வாறு யாவரும் யானை முதலியனவெல்லாம் தந்தபின்னர் அன்று மாலைக் காலத்தில் வரதராஜமூர்த்தி திவ்யாலங்காரத்தோடும் கஜாரூடராய். வீதியில் எழுந்தருளிவர உற்சவத்தை நடத்தி முன்போல் விமானத்தில் வீற்றிருக்கச் செய்து பின் 'அபீஷ்டவரதா; வரதா என்று ஸ்தோத்திரம் செய்து ' இந்தக் காஞ்சியில் பிரசன்னராயிருந்து பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்து வரவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு விடைபெற்றுத் தங்கள் தங்கள் பதங்களுக்குச் சென்றனர் பிரமதேவன் வரதராஜருடைய நாபிஸ்தானத்தில் மாணிக்க ரூபமாய்ப் பதிந்து பிரகாசித்தனன்.

பின்னர் வரதராஜமூர்த்தி தனது பக்தனான "பிரமனைப் பார்த்துத் தேவர்களுடைய வேண்டுகோளின்படி இக்காஞ்சி க்ஷேத்திரம் வைகுண்டத்தைப் பார்க்கிலும் அதிபாவனமாயிருப்பதால் எனக்கு அதிரம்யமாயிருக்கிறது. ஆகையால் இவ்விடத்தில் எனக்கு வருஷந்தோறும் சித்திரைமாசம் எனது ஜன்ம நக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரத்தில் செய்யினுல் சஹஸ்ரதாரையில் அபிஷேகமும் பூஜையும் உற்சவமும் பிராமண போஜனமும் செய்விக்கின்றவர்கள் எவர்களோ அவர்கள் என்னால் பெறக்கடவனவாகிய அபீஷ்டங்களைப் பெறக்கடவர்" என்று வரமளித்தனர்.

மகிமை.

யமுனாதீரத்தில் கோகுலக்ஷேத்திரத்தில் பாதராயண கோத்திரத்தில் யஜுர்வேதியான பானுவர்ணன் என்னும் பிராமணன் யாத்திரை மூலமாய் இந்த அத்திகிரியையடைந்தனன். அன்று வரதராஜருக்குக் கிருதாபிஷேகமாக இருந்தமையால் அவ்வபிஷேக மகோற்சவத்தைக்கண்டு களித்துப்புகழ்ந்து தன்னூரையடைந்து சிலகாலம் வாழ்ந்திருந்து மரணமடைந்தனன். அவனைத் 'தேவகணங்கள் கொண்டுபோய்ச் சுவர்க்க பட்டாபிஷேகஞ்செய்ய, அங்குச் சிலகாலம் வாழப்பெற்றுப் பின்னர் அவ்விடத்தினின்றும் விஷ்ணு கணங்களால் சூழப்பெற்று வைகுண்ட பதத்தையடைந்து வாழ்ந்திருந்தனன்.

நான்காவது அத்தியாயம் வரதராஜமூர்த்தி வரலாறு முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யை நம:

# ஐந்தாவது அத்தியாயம்.

## விஷய சூசிகை.

[ இந்த அத்தியாயம் வேகவதியாய்வந்த கலைமகளுக்குத் திருமாலால் உண்டான அவமானம் அவராலேயே நிவிர்த்தியானமையையும் நிவிர்த்தியான பின்னர் பிரமதேவனோடு முன்போல் கூடி மகிழ்ந்தமையையும் விளக்குவது. ]

## வேகவதியின் வரலாறு.

முன் சரஸ்வதி வரதராஜரால் அவமதிக்கப்பட்டு நாணங்கொண்டு கீழ்நோக்கிப் பிலத்தையடைந்தபின்னர் விஷ்ணுசாலையில் ஸ்ரீவரதராஜக்ஷேத்திரத்திற்கு மூன்று அம்சம் தெற்கில் வேகவதி என்கிற நதிரூபமாய்ச் செல்லத்தொடங்கினாள். அந்தக் கலைமகளுருவாகிய நதியானது உற்பத்தியான காலத்தில் பிரமலோகத்தினின்று நந்தி சைலத்தையடைந்து அதினின்றும் பாலாற்றில் அந்தர்க்கதமாய்க் கலந்து இருபதுயோசனைதூரம் வந்து ஹரி க்ஷேத்திரத்திற்கு மேற்கில் ஒன்றரையோஜனை தூரத்தில் அந்தப் பாலாற்றுக்கு வேறாகப் பிரிந்து மறுபடியும் அந்தவிஷ்ணு சாலைக்குக் கிழக்கில் மூன்றரை யோசனை தூரத்தில் முன்போல் பாலாற்றில்போய்க் கலந்து சமுத்திர சங்கமமாயிற்று. அது இந்தப் புண்ணியகோடி க்ஷேத்திரத்தில் பிரவேசித்துச் சென்றபடியால் புண்ணியகோடி எனவும் பெயர்பெற்றது.

வேகவதி புண்ணியகோடி எனப் பெயர்பெற்ற கலைமகளானவள் விஷ்ணுமூர்த்தியினால் தனக்குவந்த பரிபவம் நீங்கப்பெற்றுப் பேறுபெற்ற வரலாறு இனி வருமாறு.

நதிரூபமாய்ச் சென்ற சரஸ்வதி தேவியானவள் பின்னர் விஷ்ணுமூர்த்தியைத் தியானிக்க அவர் பிரசன்னராயினர். அவரை நோக்கி " ஓ, நாராயணரே, நான் நதி ரூபமாய் வரும்பொழுது நீர் நிர்வாணியாய் என் முன் எதிர்ப்பட்டீரல்லவா? அதனால் எனக்கு மானபங்கமும் பதிவிருதாபங்கமும் நேர்ந்தன. இதில் சந்தேகமில்லை. ஸ்திரீகளுக்கு இவ்விரண்டும் அங்கமும் லக்ஷணமும் அல்லவா? இவை பங்கப்படுமானால் இருந்தாலென்! இறந்தா

லென்! ஆகையால் எனக்கு அவ்விரண்டையும் நீர்தர வேண்டும், தராவிடில் நான் பிராணனை விடுவேன்" என்றனள். அதுகேட்ட விஷ்ணுமூர்த்தி மனமிரங்கி "ஓ, சரஸ்வதி, நீ எனது அம்சம். பிரமன் கையிலுள்ள சிருஷ்டி தண்டம் உன்னுடைய அம்சமாக என்னால் உண்டாக்கப்பட்டது. இங்ஙனமிருக்க, இவற்றை மறந்து அத்தண்டத்தை உன்னுடைய சுதந்தரமாகப் பிடுங்கி உன்னிடத்தில் ஒடுக்கிக்கொண்டு அகங்காரத்தோடு வந்தனையன்றோ? அதனால் உன்னை மானபங்கம் செய்து இப்பிலத்தில ஒடுக்கிப்பிரமனுடைய யாகத்தையும் முடித்து அவனுக்கு வேறு சிருஷ்டி தண்டத்தையும் கொடுத்தேன். இப்பொழுது நீ அகங்காரத்தை விட்டு என்னைத் தியானித்து எனக்குக் கற்பு வரவேண்டுமென்று பிரார்த்திக்கின்றபடியால், யான் சொல்லும் உபாயத்தை மறக்காது செய்; கற்புடையவளாவை" என்றனர். அதுகேட்ட சரஸ்வதி கற்பினையே பெண் பலமாக வெண்ணினளாகலின் அவர் மொழிக்கு இணங்கி "அவ்வுபாயத்தைக் கூறுவீராக" என்றனள்.

விஷ்ணுமூர்த்தி "ஓ சரஸ்வதி, நீ முன்போல் நதி உருவவாகவே வெளிப்பட்டு முன் வந்த வழியேசென்று க்ஷீரநதியோடு கலப்பையாயின் கற்பு நிலையழிந்த பாவம் போய்விடும். அந்நதியோடு சமுத்திர சங்கமமாவாய் சங்கமமாகிச் செல்லுகின்ற உன்னழகைப் பிரமன் கண்டு உன்னிடத்திற்கொண்டிருந்த குரோதம் நீங்கி மகிழ்ச்சி கொண்டு உன்னைக்காணச் சமுத்திர சக்கமஸ்தானத்தில் பிரசன்னமாவான். காஞ்சி க்ஷேத்திரத்திற்கு கிழக்கெல்லையாயுள்ள சமுத்திரகட்ட சங்கமத்தினாலும், பர்த்தாவினுடைய தரிசன விசேஷத்தினாலும் உனக்குச் சர்வதோஷமும் நிவர்த்தியாய்ப் பரிசுத்தத்தைபடைவாய். பின்னர்ப் பிரமன் உனக்கு அர்த்தாசனம் (தன்னாசனத்திற்பாதி) கொடுத்துத் தழுவிக்கொள்ளுவான்" என்று அனுக்கிரகம் செய்து சென்றனர்.

சரஸ்வதிதேவி அவராணையின்படியே க்ஷீரநதியோடு கலந்து அதிவேகமாய்ச் சென்று சமுத்திரசங்கமமான பொழுது பிரமன் மகிழ்ந்து தேவியையழைத்து அர்த்தாசனம் கொடுத்துக் கலைமகள் மகிழக் கலியாணம் செய்துகொண்டு "ஹே, சரஸ்வதி நீ அதிவேகமாய் நதிவடிவம் கொண்டு வந்தபடியினால் இந்த நதி

வேகவதி என்று வழங்கக்கடவது. இதில் ஸ்நானம் செய்கின்றவர்களுடைய பாவம் அதிவேகமாய்ச் செல்லக்கடவது. அவர்களுக்குப் புண்ணியமும் அதுபோலும் வளரக்கடவது" என்று வரமளித்துக் கலைமகளோடு சத்தியலோகமடைந்து சிருஷ்டித் தொழிலைச் செய்து வந்தனன்,

மகிமை.

சிறந்த கங்காதீரவாசியும் காச்யபகோத்திரனும் சாமவேதியுமான தௌமியநாதனென்னும் வேதப் பிராமணன்பாக்கியவந்தனும் வித்வானுமிருந்தும் பாதாரகமனனுயிருந்தனன். அப்பாவத்தினல் கிழத்தனம் வந்தகாலத்தில் குஷ்டம் முதலிய பல வியாதிகளினல் பீடிக்கப்பட்டு மனம் நொந்து இதற்கு விமோசனமும் உண்டாகுமோவென்று பெரியோர்களைப் பணிந்து கேட்டனன். அவர்கள் மனமிரங்கி, "ஓ, அந்தணனே, நீ வேகவதியில் ஸ்நானம் செய்தால் தீரும்" என்றனர். அப்படியே அவ்வந்தணன் வேகவதியையடைந்து மூன்று காலம் ஸ்நானம் செய்ய அவனைப்பற்றியிருந்த வியாதி எல்லாம் தீரப்பெற்று பரிசுத்தனுய்த் திட சரீரத்தோடும் தனது தேசம்போய்ச் சேர்ந்து தனதான்யாதி சகல சம்பத்துடன் வாழ்ந்திருந்து அந்தியத்தில் விஷ்ணுபதம் அடைந்தனன்.

ஐந்தாவது அத்தியாயம் வேகவதியின் வரலாறு முற்றிற்று.

---

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## ஆருவது அத்தியாயம்.

### விஷய சூசனை.

---

[இது, ஏகாம்பர நாதருடைய எல்லை கயாரோகணேசுவராலயம் முதல்சுவேதப்பெருமாள் ஆலயம் வரையில் எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் நான்கு எனவும், சிவாலயம் எட்டு எனவும், விஷ்ணுவாலயம் எட்டு எனவும், முத்திரைகள் ஐந்து எனவும், தீர்த்தம் நான்கு எனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது,]